தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066



dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி



NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்

| Vol: 02 | Issue: 214 | 4 Pages | 2.3.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 214 | 4 பக்கங்கள் | 2.3.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |









**நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்**
**கொல்லாமை சூழ்வான் தலை**

**விளக்கம்:**
வாழ்க்கையின் தன்மையைக்கண்டு அஞ்சித் துறந்தவர்கள் எல்லாரிலும், கொலைசெய்வதற்க்கு அஞ்சிக் கொல்லாத அறத்தைப் போற்றுகின்றவன் உயர்ந்தவன்.

## சீன பல்கலைக்கழகங்களுக்கு தடை தைவான் அரசு அறிவிப்பு



தைபே நகரம், மார்ச். 2
1949ல் தனிநாடாக பிரிந்து சென்ற தைவானை மீண்டும் தன்னுடன் இணைக்க சீனா துடித்து வருகிறது. இதற்காக தைவான் அருகே அடிக்கடி போர்ப்பயிற்சி மற்றும் எல்லைக்குள் போர் விமானங்களை அனுப்பி பதற்றத்தை தூண்டுகின்றது. தைவான் எல்லை பகுதியில் சீனாவின்அத்துமீறல்நாளுக்குநாள்அதிகரித்து வருவதாகதைவான்பாதுகாப்பு அமைச்சகம் குற்றம்சாட்டி உள்ளது.

இந்தநிலையில் சீனாவைச் சேர்ந்த பீஹாங் பல்கலைக்கழகம், பெய்ஜிங் தொழில்நுட்ப நிறுவனம், நான்ஜிங் விமானவியல் மற்றும் விண்வெளி பல்கலைக்கழகம் உள்ளிட்ட7 பல்கலைக்கழகங்களுக்கு தைவான் தடை விதித்துள்ளது.

இதுகுறித்து தைவான் அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக சீன பல்கலைக்கழகங்களுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. எனவே அதனுடன் தைவானில் உள்ள கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் எவ்வித கல்வி நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது' எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## போப் பிரான்சிஸ் காபி சாப்பிடுகிறார், செய்தித்தாள் படிக்கிறார்: வாடிகன் தகவல்

ரோம், மார்ச். 2
கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக போப் பிரான்சிஸ் (வயது 88) இருந்து வருகிறார். இந்நிலையில், கடந்த பிப்ரவரி 14ந்தேதி அவருக்கு திடீரென உடல்நலம் பாதிக்கப்பட்டு ரோம் நகரில் உள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். ஏற்கனவே நுரையீரல் பாதிப்பால் அவதிப்பட்டு வரும் அவருக்கு சுவாச குழாயில் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது.

போப்புக்கு சுவாச தொற்று அதிகரித்து காணப்படுகிறது. இதனால், அவருக்கு தொடர்சிகிச்சை தேவைப்படுகிறது என மருத்துவமனை வட்டாரம் தெரிவித்தது. இதனால், அவர் மருத்துவமனையில் தொடர்ந்து தங்கி சிகிச்சை பெறுகிறார்.

இந்த சூழலில், சில நாட்களுக்கு முன்பு வாடிகன் செய்தி தொடர்பாளர் மேத்யூ புரூனி கூறும்போது, வைரசுகள், பாக்டீரியா, பூஞ்சை மற்றும் ஒட்டுண்ணிகள் என பல வகையான தொற்று பாதிப்புகளால் போப் அவதிப்பட்டு வருகிறார். சமீப காலங்களாக அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவில், அவருக்கு சுவாச குழாயில் கலவையான தொற்று ஏற்பட்டு இருக்கிறது என உறுதியாகி உள்ளது.

இதனால், அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டு உள்ளது என கூறினார். இதற்கு முன்பு, கடந்த 2023ம் ஆண்டு நிம்மோனியா பாதிப்புக்காக போப் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். எனினும் போப், பத்திரிகை வாசிப்பது உள்பட சில அன்றாட பணிகளை செய்து வருகிறார். அவருடைய நிலைமை சீராக உள்ளது என்று புரூனி கூறினார்.

போப் பிரான்சிஸ் நிம்மோனியா பாதிப்பில் இருந்து விடுபட்டு 2 வாரகாலம் ஆன நிலையில், திடீரென நேற்று அவருடைய உடல்நிலையில் பாதிப்பு ஏற்பட்டது. நேற்று மதியம் அவருக்கு திடீரென இருமல் ஏற்பட்டது. அப்போது சுவாசிக்கும்போது, வாந்தியை உள்ளிழுத்து விட்டார் என டாக்டர்கள் தெரிவித்தனர்.

அதனை வெளியே எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டு உள்ளது. அதனை எப்படி மேற்கொள்வது மற்றும் இந்த நிகழ்வால், போப்பின் ஒட்டுமொத்த மருத்துவ நிலையிலும் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறதா? என ஆய்வு செய்வதற்கும் இன்னும் ஓரிரு நாட்கள் ஆகும் என டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

அவரை டாக்டர்கள் அதிக பாதிப்பில்லாத வென்டிலேசன் (உயிர் காக்கும் சிகிச்சை பிரிவு) பிரிவில் வைத்து நேற்று சிகிச்சை அளித்தனர். அவர் ஆபத்தில் இருந்து இன்னும் மீளவில்லை. தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது என டாக்டர்கள் தெரிவித்தனர்.

இதன்பின்னர், இன்று காலை அவருடைய உடல்நிலை தேறி வருகிறது என டாக்டர்கள் கூறியுள்ளனர். போப் அவராகவே எழுந்து, காபி சாப்பிடுகிறார். உணவையும் எடுத்து கொள்கிறார். செய்தித்தாள் படிக்கிறார் என தெரிவிக்கப்பட்டது. எனினும், 5ந்தேதி வரும் சாம்பல் புதன் வரை அவர் எந்த நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கமாட்டார் என தகவல் தெரிவிக்கின்றது.

## துருக்கியில் முடிவுக்கு வந்த 40 ஆண்டு உள்நாட்டு போர் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி அறிவிப்பு



அங்காரா, மார்ச். 2
துருக்கியில் கடந்த 1978ம் ஆண்டு அப்துல்லா ஓசலான் உருவாக்கிய குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி, 1984ம் ஆண்டு முதல் கிளர்ச்சியை ஏற்படுத்தி உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வந்தது.

இதனால், குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி தடை செய்யப்பட்டதோடு, துரோக குற்றச்சாட்டில் 1999 ம் ஆண்டு ஓசலான் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதனிடையே,40ஆண்டுகளாகநடந்தஉள்நாட்டுப்போரில்,30ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இந்த போரால் தென்கிழக்கு துருக்கி, சிரியா, வடக்கு ஈராக் மற்றும் ஈரான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளை சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டனர். இந்த சூழலில், குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியின் ஆயுதப்போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர விரும்புதாக அந்த அமைப்பின் தலைவர் ஓசலான் கருத்து தெரிவித்தார். இதனையடுத்து, துருக்கியில் 40 ஆண்டுகாலமாக நடந்து வந்த உள்நாட்டு போரை நிறுத்துவதாக குர்திஸ் தொழிலாளர் கட்சி அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. தங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டாத வரை, இனி ஆயுதம் ஏந்தி போராட மாட்டோம் என்று குர்திஸ் தொழிலாளர் கட்சி அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆதிக்க மொழித் திணிப்பைத் தடுப்பேன்; மாநில மொழிகளை வெறுப்போம் என்பதே பாஜகவின் மறைமுக மொழிக் கொள்கை

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சரமாரியான பேச்சு

சென்னை, மார்ச். 2
இந்தி, சமஸ்கிருதத்தை திணிப்போம், மாநில மொழிகளை வெறுப்போம் என்பதே பாஜகவின் மறைமுக மொழிக் கொள்கை என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றசாட்டு வைத்துள்ளார். ஆதிக்க மொழித் திணிப்பைத் தடுத்து, அன்னைத் தமிழைக் காப்பேன். தமிழ்நாடு காட்டுகின்ற பாதையே ஒவ்வொரு மாநிலமும் தன் தாய்மொழியைக் காப்பதற்கான பாதை.மாநிலமொழிகளைவளர்க்க மும்மொழி திட்டத்தை செயல்படுத்துகிறோம் என்று ஒன்றிய அரசு பொய் சொல்கிறது




தமிழ்நாடு காட்டுகின்ற பாதையே ஆதிக்க மொழிகளை அடையாளம் கண்டு, அவற்றின் வலையில் வீழாமல் தடுத்துப் பயணிக்கும் பாதை என்பதை பஞ்சாப், தெலங்கானா மாநில அரசுகளின் அறிவிப்பு உறுதி செய்திருக்கிறது.

இன்று பஞ்சாபும், தெலங்கானாவும் உத்தரவிட்டிருப்பதை, இருபது ஆண்டுகளுக்கு முன்பே தொலைநோக்குப் பார்வையுடன், "தமிழ்நாட்டில் ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரையிலான அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் ஒரு மொழிப் பாடமாகக் கற்றுத் தரப்பட வேண்டும்" எனச் சட்டமாக நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

ஆட்சி மொழி – அலுவல் மொழி என்ற வகையில் இந்தி மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் என்ற நிலை 1965ஆம் ஆண்டு இந்தியாவில் உருவானபோது, முதலில் எச்சரித்த மாநிலம் தமிழ்நாடுதான். எச்சரித்தது மட்டுமல்ல, 'தமிழ் வாழ்க.. இந்தி ஒழிக' என உச்சரித்தபடியே தன் உடலுக்குத் தானே தீ வைத்துக்கொண்டு மொழிகாக்கும் போரில் உயிர் ஈந்த தியாக வரலாறும் தமிழ்நாட்டிற்குரியது.

முத்தமிழறிஞர் கலைஞரைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் அடைத்தனர். அதே சட்டத்தில் முரசொலி மாறன் அவர்களும் கைது செய்யப்பட்டார். பேரறிஞர் அண்ணா உள்பட கழகத்தினர் களம் கண்டனர். சிறை சென்றனர்.

தமிழ்நாட்டு மக்களின் தாய்மொழி உணர்வுத் தீ, ஆந்திரா தொடங்கி அசாம் வரை பரவியது. அதன்பிறகே, இந்திய ஒன்றிய அரசில் ஆங்கிலமும் இணை ஆட்சி மொழியாக – அலுவல் மொழியாக நீடிக்கும் என்ற நிலை ஏற்பட்டது

இந்திய ஒன்றியத்தில் ஒரு மாநிலத்திற்குரிய சட்டவழியிலான உரிமையை மிகச் சரியாகக் கையாண்டு இருமொழிக் கொள்கையைச் சட்டமாக்கிய பேரறிஞர் அண்ணா, "என்னால் ஆனதை நான் செய்துவிட்டேன். இனி டெல்லி தன்னால் ஆனதைச் செய்து கொள்ளட்டும்" என்று அறைகூவல் விடுத்தார்.

1971ஆம் ஆண்டு கோவையில் தி.மு.கழக மாணவர் மாநாடு நடைபெற்றது. அழைப்பிதழின் உரையாற்றுவோர்பட்டியலில்என்பெயர் இல்லாவிட்டாலும், மாநாட்டின் எழுச்சியால்உந்தப்பட்டு, "மொழிக்காக, போராடுகிற இந்த நேரத்தில், நம்முடைய உயிரை இழக்கின்ற தியாகத்தைச் செய்வதற்குக்கூட காத்திருக்கிறோம்" என்று நான் முழங்கினேன்.

உங்களில் ஒருவனான எனக்கு உடன்பிறப்புகள் பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்து, மகிழ்ச்சியைப் பகிர்ந்து, என்னையும் மகிழ வைத்திருக்கிறீர்கள். உங்கள் அன்பான வாழ்த்துகள் என்னை மேலும் உறுதியுடன் உழைப்பதற்கும் இனம் மொழி காக்கும் போராட்டத்தை முன்னெடுப்பதற்கும் ஊக்கமாக அமைந்துள்ளது. ஆதிக்க மொழித் திணிப்பைத் தடுத்து, அன்னைத் தமிழைக் காப்பேன்!" என இந்தப் பிறந்தநாளில் சூளுரைக்கிறேன்

## குன்னூரில் காவல்துறையினர் மற்றும் தன்னார்வர் அமைப்பு இணைந்து நகரப்பகுதி முழுவதும் தூய்மைப்படுத்தும் பணி



குன்னூர், மார்ச். 2
நீலகிரி மாவட்டம் காவல் கண்காணிப்பாளர் நிஷா அவர்களின் உத்தரவின் பேரில் குன்னூர் டிஎஸ்பி ரவி அவரின் தலைமையில் குன்னூர் சுற்றுவட்டார பகுதியில் உள்ள ஐந்து காவல் நிலையத்தில் பணியாற்றும் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், காவலர்கள், போக்குவரத்து காவல்துறை, என 75 காவல் துறையினரும் தன்னார்வையில் அமைப்பைச் சேர்ந்த 25 தன்னார் அவர்களும் இணைந்து குன்னூர் நகரப்பகுதி முழுவதும் தூய்மை பணி மேற்கொண்டனர் பஸ் நிலையம், டிடிகே சாலை, மவுண்ட் ரோடு, மார்க்கெட், என பல்வேறு பகுதிகளில் ஆங்காங்கே கிடக்கும் பிளாஸ்டிக் குப்பைகளை எடுத்து பையில் சேகரித்து நகராட்சி வாகனத்தில் ஏற்றி அனுப்பினர். காவல்துறையின் தூய்மை பணிக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

## அகில இந்திய விவசாய அமைப்பின் சார்பாக ஏரிகள், குளங்களை சீரமைக்க கோரிக்கை




அகில இந்திய விவசாய அமைப்பின் சார்பாக தமிழகத்தில் உள்ள ஏரி, குளங்கள், குட்டைகள், நீர்நிலைகள், குளங்கள் தூர் வாராமல் சீரழிந்து கிடக்கின்றன தமிழ்நாடு அரசு கிராமப்புற ங்களில் உள்ள ஏரிகள் குளங்கள் சீரமைக்கப்படுமா? தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா தென்னிந்திய ஒருங்கிணைப்பாளர் & தமிழ்நாடு மாநில தலைவர் திரு முத்துகிருஷ்ணன் சென்னையில் கேள்வி எழுப்பிய நிலையில் இதனை சீர் செய்யும் பொருட்டு செய்தியாளர்களை சந்தித்து பேட்டி அளித்தார்



கோவை மதுக்கரை பகுதியில் கஞ்சா மற்றும் மெத்தபெட்டமைன் உள்ளிட்ட போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டதாக 6 பேர் பிடிபட்டனர். பிடிபட்ட 6 பெரிடம் இருந்து 8.75 கிலோ கஞ்சா, 10 கிராம் மெத்தபெட்டமைன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

## முதல்வர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாள் விழா



சென்னை, மார்ச். 2
சென்னை மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் இரத்ததான முகாம் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழக முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் இரத்ததான முகாம் மற்றும் ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வை சென்னை மேற்கு மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் பா. ராஜு அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். இரத்ததான முகாமை சேப்பாக்கம் பகுதி செயலாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி 9வது மண்டலக் குழு தலைவர் எஸ். மதன் மோகன் அவர்கள் துவக்கி வைத்து, பொதுமக்களுக்கு உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் 114(அ) வட்ட செயலாளர் A. தமிம்அன்சாரி, சென்னை மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் G. ராஜராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## எத்திராஜ் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) பட்டமளிப்பு விழா




சென்னை, மார்ச். 2
எத்திராஜ் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) பட்டமளிப்பு விழா மிகுந்த விமர்சையாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் கல்லூரியின் தலைவர், அறங்காவலர் குழுவின் முதல்வர் திருமதி லதா ராஜன் (CIEL HR சேவைகள் லிமிடெட் இயக்குநர் மற்றும் மா ஃபாய் குழுமத்தின் இணை நிறுவனர்) சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். நிகழ்ச்சியில் கல்லூரி நிர்வாகிகள், பேராசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவிகள் உற்சாகமாக கலந்து கொண்டனர்.

# முதல்வர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாள் விழா



சென்னை, மார்ச். 2

சென்னை மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் இரத்ததான முகாம் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழக முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் இரத்ததான முகாம் மற்றும் ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வை சென்னை மேற்கு மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் பா. ராஜு அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். இரத்ததான முகாமை சேப்பாக்கம் பகுதி செயலாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி 9வது மண்டலக் குழு தலைவர் எஸ். மதன் மோகன் அவர்கள் துவக்கி வைத்து, பொதுமக்களுக்கு உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் 114(அ) வட்ட செயலாளர் A. தமிம்அன்சாரி, சென்னைமேற்குமாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் G. ராஜ ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நீலகிரி மாவட்டம் குன்னூரில் வழக்கறிஞர்கள் சட்ட திருத்த மசோதாவை திரும்பப் பெறக் கூறி மத்திய அரசை கண்டித்து வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்



ஊட்டி, மார்ச். 2

நீலகிரி மாவட்டம் குன்னூரில் வழக்கறிஞர்கள் சட்ட திருத்த மசோதாவை திரும்பப் பெறக் கூறி மத்திய அரசை கண்டித்து வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மத்திய அரசு புதிதாக வழக்கறிஞர்கள் சட்ட திருத்த மசோதா ஒன்றினைஅமலுக்குகொண்டு வந்தது இதனைக் கண்டித்து தமிழகமெங்கும் வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் இதனைத் தொடர்ந்து நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றம் முன் வழக்கறிஞர்கள் புதிய சட்ட திருத்த மசோதாவை மத்திய அரசு திரும்பப் பெற கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் மேலும் வரும் வெள்ளிக்கிழமை உண்ணாவிரத போராட்டம் நடத்தப் போவதாக வழக்கறிஞர் சங்கத்தினர் தெரிவித்தனர் இந்த ஆர்ப்பாட்டத்தில் சங்க தலைவர் ராமச்சந்திரன் செயலாளர் நாகதேவி துணைத் தலைவர் மனோஜ் குமார் இணைச் செயலாளர் முபாரக் அற்புதமணி மற்றும் வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.

# மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் கிளைகளின் சார்பாக அரசு பள்ளி மாணவிகளுக்கு வழங்கும் கல்வி உதவி தொகையை நாடாளுமன்ற உறுப்பினர் வெங்கடேசன் வழங்கினார்




மதுரை, மார்ச். 2

மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலக அரங்கில் மலபார் கோல்டு & டைமண்ட்ஸ்ன் சி எஸ் ஆர் (கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு நிகழ்ச்சி) மதுரை விஷால் டி மால் & மேல மாசி வீதி மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் கிளைகளின் சார்பாக மதுரை மாவட்டத்தில் உள்ள 42 அரசு பள்ளிகளை சேர்ந்த 301 மாணவிகளுக்கு சி எஸ் ஆர் (கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு மலபார் குழுமம்) சார்பாக மொத்தம் சுமார் ரூபாய் 24 லட்சத்தி 70 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான காசோலையை மாணவிகளுக்கு மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் வெங்கடேசன் அவர்கள் வழங்கினார், இந்நிகழ்ச்சியில் மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தமிழ்நாடு கிழக்கு மண்டல தலைவர் கதிர் முகமது, மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் மதுரை விஷால் டீ மால் கிளை தலைவர் நிஷாந்த், மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் மதுரை மேலமாசி வீதி கிளை தலைவர் சிஹாபுதீன் ஆகியோர் உடன் இருந்தனர், மற்றும் மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நிறுவனத்தின் வெற்றிகரமான வணிகத்திற்கு அதன் சமூக பொறுப்பின் முன்முயற்சிகள் மற்றும் இதரகாரணங்கள் ஆகும், தனது லாபத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை சுகாதாரம், கல்வி, வீட்டு வசதி, சுற்றுச்சூழல், பாதுகாப்பு மற்றும் மகளிரை அதிகாரமயமாக்குதல் என சமூக பொறுப்புள்ள திட்டங்களுக்கு செலவு செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது,

# விக்கிரவாண்டி அருகே கொத்தமங்கலத்தில் நீர்நிலை ஆக்கிரமிப்பு கண்டித்து மாவட்ட ஆட்சியரிடம் கிராம பொதுமக்கள் மனு



விழுப்புரம், மார்ச். 2

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் திண்டிவனம் தாலுக்கா செ.கொத்தமங்கலம் கிராமத்தில் நீர்நிலை ஆக்கிரமிப்பு கண்டுகொள்ளாமல் இருக்கும் அதிகாரிகளை கண்டித்து மாவட்ட ஆட்சியரிடம் கிராம பொதுமக்கள் மனு அம்மனுவில் கூறியிருப்பதாவது செ.கொத்தமங்கலத்தில் ஆதிதிராவிட தாழ்த்தப்பட்டவர்களை அவமதித்து வரும் வகையில் பல ஆண்டு காலமாக நீர்நிலை ஏறி அருகாமையில் இருக்கும் நில உரிமையாளர்கள் பட்டா பெற்று அனுபவித்து வருவதுடன் அதில் இருக்கும் மரங்களை வெட்டி விற்பதும் ஏரியை மீன் குத்தகைக்கு ஆண்டுக்கு ஒரு முறை 300000க்குஏலம் விடுவதும் இதனை கேட்டால் தாழ்த்தப்பட்டவர் எங்களை அவமதித்து வருவதாக காலம் காலமாக எங்கள் கிராமத்தில் ஜாதி கலவரம் ஏற்படும் நிலை உள்ளதால் இதனைத் தவிர்க்க உடனடியாக மாவட்ட கலெக்டர்

இதில் தலையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்மணியில் கூறி இருந்தனர்

# புளியங்குடியில் பயங்கரம் ஆட்டோ, பஸ் நேருக்கு நேர் மோதல், ஆட்டோ டிரைவர் பலி. பள்ளி மாணவி படுகாயம்



புளியங்குடி, மார்ச். 2

புளியங்குடி சிந்தாமணியில் நேற்று மாலை பள்ளி மாணவர்களை ஏற்றி வந்த ஆட்டோவும், அரசு பஸ்ம் நேருக்கு நேர் மோதியதில் ஆட்டோ டிரைவர் பரிதாபமாக உயிர் இழந்தார். மாணவர்கள் படுகாயமடைந்து சிகிட்சை பெற்று வருகின்றனர் . சிந்தாமணி டோல்கேட் பகுதியில் நேற்று மாலை4 மணி அளவில் பள்ளி மாணவர்களை ஏற்றி கொண்டு வந்த ஆட்டோவும் மதுரையில் இருந்து செங்கோட்டை செல்லும் அரசு பேருந்தும் திடீரென நேருக்கு நேர் மோதியது இதில் ஆட்டோ அப்பளம் போல நொறுங்கி விட்டது ஆட்டோ டிரைவர் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தார் . ஆட்டோவில் வீடு திரும்பி கொண்டு இருந்த டிஎன் புதுக்குடி உள்ள அரசு உதவி பெறும் பள்ளியில் படிக்கும் சிந்தாமணி சான்றோர் மடத்து தெருவை சேர்ந்த அருள் மகன்கள் ரோகன் [11] ரோகித் [10] மற்றும் அதே பகுதியை சேர்ந்த துரைசாமி மகள் மாணவி ராகிஷா [ 9] ஆகியோர் பலத்த காயம் அடைந்தனர், தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த புளியங்குடி இன்ஸ்பெக்டர் ஷியாம் சுந்தர் போக்குவரத்தை சரி செய்து ஆம்பூலன்ஸ வாகனம் மூலமாக மாணவி ராகிஷாவை மேல் சிகிச்சைக்காக நெல்லையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். . மாணவர்கள் இருவரும் சிந்தாமணியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். போலீசார் மற்றும் வாசுதேவநல்லூர் தீ அணைப்பு துறையினர் சேர்ந்து இடிபாடுகளுக்கு இடையே சிக்கி இருந்த ஆட்டோ டிரைவர் செல்வக்குமார் உடலை பொதுமக்கள் உதவியுடன் ஆட்டோவை உடைத்து வெளியில் எடுத்து புளியங்குடி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்

இந்த விபத்தினால் சுமார் ஒரு மணி நேரம் அப்பகுதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. பேருந்தை ஓட்டி வந்த கடையநல்லூர் கண்மணியாபுரத்தை சேர்ந்த பரமசிவன் மகன் சந்திரசேகரனை [54] புளியங்குடி இன்ஸ்பெக்டர் ஷியாம் சுந்தர் விசாரணை செய்து வருகின்றார்.

# கோவை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் முதல்வர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாள் விழா




கோவை, மார்ச்.2

தமிழக முதல்வர் கழக தலைவர் திரு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளைமுன்னிட்டு துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆசியுடன் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறையின் அன்பு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்களின் ஆணைக்கிணங்க கோவை வடக்கு மாவட்ட கழகத்தின் ஆற்றல்மிகு செயலாளர் அண்ணன் திரு தொண்டாமுத்தூர் ஆ.ரவி அவர்களின் வழிகாட்டுதலின்படி காளப்பட்டி பகுதி கழக செயலாளர் திரு பொன்னுசாமி அவர்களின் ஆலோசனையின்படி 23வது வட்டக் கழகத்தின் சார்பில் சிட்ரா சந்திப்பில் அமைந்துள்ள கொடிக்கம்பத்தில் இரு வண்ணக் கொடியேற்றி ,இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. மேலும் கோடைகால வெப்பத்தை போக்க நீர் மோர் பந்தல் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கோவை வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் திரு எஸ். பழனிச்சாமி, 7வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு கோவிந்தராஜ் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள்,பகுதி கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் BLA2,BLC மற்றும் கழக உடன்பிறப்புக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்....

என்றும் கழகப் பணியில்,

சித்ரா கே.மணியன் 23வது வட்ட கழக செயலாளர் 23 வது வார்டு மாமன்ற உறுப்பினர்

# J.M.J media வினால் நடாத்தப்பட்ட போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு



கோவை, மார்ச் 2

சமூகத்தின் மத்தியில் இன்று மிக வேகமாக ஊடுறுவி வரும் போதைப் பொருட்களை இல்லாமலாக்கி "போதைப் பொருளற்ற உலகை எதிர்கால சந்ததிகளுக்கு கொடுப்போம்" எனும் தொனிப் பொருளில் ஜே.எம்.ஜே மீடியாவினால் விழிப்புணர்வு நிகழ்வு உலகின் பல பாகங்களிலும் மிகச்சிறப்பாக இடம் பெற்று முடிந்தது.

ஜே.எம்.ஜே மீடியா நிறுவனத்தினால் ஒவ்வோரு மாதமும் சமூகத்திற்கு தேவையான ஒவ்வோரு நிகழ்வுகள்நடாத்தப்பட்டு வருகின்றன. அதற்கமைய இந்த பெப்ரவரி மாதம் தமது உலக நாடுகளில் உள்ள அவ் அமைப்பின் குழவினருடன் இணைந்து திட்டமிடப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வானது, நம் சமூகத்தின் மத்தியில் மிக வேகமாக ஊடுறுவி வரும் உயிர்க்கொள்ளியான போதைப் பொருள்களை அழித்து ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் போதைப் பொருள் பழக்கத்தை முற்றாக மனிதர்களிடம் இருந்து இல்லாமல் செய்ய வேண்டும் என்ற சிந்தனையுடனும் JMJ media நிறுவன பணிப்பாளர் ஜஸூரா ஜலீலின் வழிகாட்டலினூடாக எதிர்கால தலைவர்களான பாடசாலை மாணவர்கள், தனியார் வகுப்பு மாணவர்கள், பல்கலை கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்களை இணைத்து இவ் விழிப்புணர்வு நிகழ்வினை வெகுசிறப்பாக ஒழுங்குபடுத்தி நடாத்தி முடித்தனர்.

இந்நிகழ்வில் J.M.J media இன் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஒருங்கிணைப்பாளர்கள், பல பிரதேசங்களைச் சேர்ந்த வெவ்வேறு துறையில் பாண்டித்தியம் பெற்ற ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான விசேட கருத்தரங்குகளும் நடத்தப்பட்டிருந்ததோடு, ஊர்வலங்களும் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வின் சிறப்பம்சமே வளர்ந்து வரும் நாளையதலைமுறையான எம் இளைஞர்கள் உட்பட சிறுவர்களும் கலந்து சிறப்பித்தமையுமாகும். இந்த நிகழ்வில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வை சிறப்புடன் வெற்றிகரமாக ஒழுங்கு செய்து முடித்த பெருமை அக்குழுவனர்களையே சாரும்.

# அரசுப் பள்ளிக்குப் பெருமை சேர்த்த அரசுப் பள்ளி மாணவர் இரா.சித்தார்த்!



புதுச்சேரி, மார்ச். 2

புதுச்சேரி காமராஜர் மணிமண்டபத்தில் புதுச்சேரி அரசு சுகாதாரம் மற்றும் குடும்ப நலவழித் துறை செய்தி, கல்வி மற்றும் தொடர்புப்பிரிவு (IFC) நடத்திய மாபெரும் சுகாதாரத் திரு விழா நடைபெற்றது.

நிகழ்வில் மாண்புமிகு புதுச்சேரி துணைநிலை ஆளுநர். மாண்புமிகு புதுச்சேரி முதல் அமைச்சர். மாண்புமிகு புதுச்சேரி சபாநாயகர். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர். மாண்புமிகு தலைமைச் செயலர். மாண்புமிகு சுகாதாரத்துறை செயலர். மற்றும் இயக்குனர் துறை சார்ந்த அதிகாரிகள். ஆசிரியர் பெருமக்கள். மாணவச் செல்வங்கள். முன்னிலையில் தமிழ்க்கனல் க.ராமகிருட்டிணன் அரசு உயர்நிலைப்பள்ளி ZONE 2 பிரிவில் பயிலுகின்ற ஐந்தாம் வகுப்பு மாணவர் இரா.சித்தார்த் அவர்களுக்கு டெங்கு விழிப்புணர்வு நாட்டுப்பற்றுடன் தொடர்ந்து பணியாற்றியமைக்காக மாண்புமிகு துணைநிலை ஆளுநர் மாண்புமிகு புதுச்சேரி முதலமைச்சர் அவர்களின் கரங்களால் மாணவருக்கு "DREAMS 24" விருது வழங்கப்பட்டது! ஆசிரியர் விஜயா அம்மையார் அவர்களுடன் மாணவர் சித்தார்த் விருதை பெற்றுக் கொண்டார்!

# சிறுமலை தனியார் எஸ்டேட்டில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் ஆய்வு

திண்டுக்கல், மார்ச். 2

திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை தனியார் எஸ்டேட்டில் டெட்டனேட்டர்கள் கொண்டு குண்டு தயாரித்து வந்த இளைஞர் உயிரிழந்தார்.

கேரளாவை சேர்ந்த சிபு என்ற இளைஞரின் உடல் தனியார் எஸ்டேட்டில் இருந்து மீட்கப்பட்டது. அவரது உடல் அருகில் இருந்து வெடிபொருட்களும் மீட்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் சிறுமலை தனியார் எஸ்டேட்டில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் ஆய்வு நடத்தி வருகின்றனர். வெடிபொருட்கள் மீட்கப்பட்ட நிலையில் என்.ஐ.ஏ. அதிகாரிகள்விசாரணைநடத்தி வருகின்றனர்.

# தமிழகத்தில் அ.தி.மு.க., ஆட்சி அமைந்ததும் அனைத்து மகளிருக்கும் ரூ.2000 வழங்கப்படும் பொள்ளாச்சி ஜெயராமன்



திருப்பூர், மார்ச்.2

திருப்பூரில் அ.தி.மு.க. பொதுக்கூட்டம் நடந்தது. இதில் திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் பொள்ளாச்சி ஜெயராமன் எம்.எல்.ஏ., பங்கேற்று பேசியதாவது:

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கொண்டு வந்து நிறுத்தப்பட்ட அனைத்து திட்டங்களையும் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான ஆட்சி அமைந்ததும் மீண்டும் செயல்படுத்தப்படும்.

இன்று மின் கட்டணம், வீட்டு வரி, சொத்து வரி உயர்ந்து விட்டது. பாதாள சாக்கடை வரி 129 சதவீதம் உயர்ந்து விட்டது. நாய், பூனை வளர்த்தாலும் பூனை குட்டி போட்டாலும் வரி போடுகிறார்கள்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 10 ஆண்டு காலம் எந்த வரியும் உயர்த்தப்படவில்லை. ஆனால் இன்று வீட்டு வரி 100 சதவீதம் உயர்த்தப்பட்டு விலைவாசியும் உயர்ந்து விட்டது.

தமிழகத்தில் இன்று நல்ல திட்டங்கள் எதுவும் இல்லை.

இன்னும் 10 அமாவாசையில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் தமிழகத்தில் நல்லாட்சி அமையும். மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் அனைத்து மகளிருக்கும் மாதம் தோறும் ரூ.2000 வழங்கப்படும் என்றார்.

# ரேசன் கடைகளில் நாட்டு சர்க்கரை வழங்கப்படும்: பா.ம.க. வேளாண் மாதிரி பட்ஜெட்டில் தகவல்



சென்னை, மார்ச். 2

பாட்டாளி மக்கள் கட்சியின் வேளாண் நிழல் நிதி நிலை அறிக்கையை பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் இன்று வெளியிட்டார்.

அதில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:

மாநிலத்தில் மொத்த பட்ஜெட்டில் 25 சதவீதம் வேளாண் துறைக்கு ஒதுக்கப்படும். அனைத்து விளைப் பொருள்களையும் அரசே கொள்முதல் செய்ய கட்டாயம் சட்டம் கொண்டு வரப்படும். விளைப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்வதற்காக ஓர் ஆணையம் அமைக்க வேண்டும். விவசாயிகளால் உற்பத்தி செலவுடன் 50 சதவீதம் லாபம் சேர்த்து விலை நிர்ணயம் செய்யப்படும். காய்கறி, பழங்கள் ஆகியவற்றுக்கு 3 மாதங்களுக்கு ஒரு முறை விலை நிர்ணயம் செய்யப்படும்.

நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.3500 யையும், கரும்பு டன்னுக்கு ரூ.5 ஆயிரமும் நிர்ணயிக்கப்படும். ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் 30 ஆயிரம் காவிரி பல்பொருள் அங்காடிகள் அமைக்கப்படும். ரேசன் கடைகளில் நாட்டு சர்க்கரை, நல்லெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவை மானிய விலையில் வழங்கப்படும்.

வனவிலங்குகள் தாக்கி உயிரிழப்போருக்கு ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்கப்படும். வேளாண்மை துறையில் 50 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். நெல் உற்பத்தி திறனை அதிகரிக்க சிறப்பு திட்டம் கொண்டு வரப்படும்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறி, பழங்கள், மலர்கள் ஆகியவற்றை வீணாகாமல் பாதுகாக்க அனைத்து வட்டாரங்களிலும் குளிர் சாதன கிடங்குகள் அமைக்கப்படும்.

சிப்காட் தொழிற்பேட்டைக்கு நிலங்களை கையகப்படுத்த தடை விதிக்கப்படும். அதே போல் அரியலூர் மாவட்டத்தில் புதிய சிமெண்ட் தொழிற்சாலைகள், நெய்வேலி சுரங்க விரிவாக்க திட்டம், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் அனைத்து வகை தொழில் திட்டங்களுக்கும் தடை விதிக்கப்படும்.

கோதாவரிகாவிரி, காவிரிகுண்டாறு ஆகிய நதிகள் இணைப்பு திட்டங்கள் நிறைவேற்றப்படும். ஒரு லட்சம் கோடியில் நீர்பாசன திட்டங்கள் நிறைவேற்றப்படும். தமிழ்நாட்டில் 25 இடங்களில் இயங்கும் மணல் குவாரிகள் மூடப்படும். ஊரக வேலைவாய்ப்பு திட்ட வேலை நாட்கள் 150 ஆக உயர்த்தப்படும். அந்த திட்டம் வேளாண்மை பணிக்கும் நீட்டிக்கப்படும்.

திண்டிவனத்தில் வேளாண்மை கல்லூரி மற்றும் தஞ்சாவூர், வேலூர், நெல்லை ஆகிய இடங்களில் 3 புதிய வேளாண் கல்லூரிகள் உருவாக்கப்படும் உள்ளிட்ட அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்நிகழ்ச்சியில் ஏ.கே. மூர்த்தி, திலகபாமா, வடிவேல் ராவணன், ஜெயராமன், அருள், அடையாறு வடிவேல் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் அன்புமணி ராமதாஸ் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழ்நாட்டில்வேளாண்மைக்கு என்று தனி பட்ஜெட் போட வைத்ததே பா.ம.க.தான். மாநிலம் முழுவதும் இயற்கை வளங்கள் கொள்ளை போய் இருக்கின்றன. பல இடங்களில் அழிக்கப்படுகின்றன. இதுதான் திராவிட மாடலா? நிலத்தில் ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கு எதிர்ப்பு கிளம்பியதால் இப்போது ஆழ்கடலில் ஹைட்ரோகார்பன் எடுக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. நமது கடல் பிராந்தியம் நமக்கு கிடைத்த வரப்பிரசாதம். ஆழ்கடலில் ஹைட்ரோ கார்பன் எடுத்தாலும் இயற்கை சீற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

எனவே இதை அனுமதிக்க முடியாது. அனைத்து கட்சிகளும் இதை எதிர்த்து போராட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ரமலான் நோன்பு இன்று முதல் தொடக்கம்

சென்னை, மார்ச். 2

முஸ்லிம்களின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்று புனித ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பதாகும். இந்த மாதம் முழுவதும் நோன்பை கடைபிடிப்பார்கள்.

இஸ்லாமிய காலண்டரில் 9வது மாதம் ரமலான் ஆகும். இந்த புனித மாதத்தில் தான் மக்களுக்கு நேர்வழி காட்டக் கூடிய திருக்குர்ஆன் அருளப்பட்டது.

ஆண்டுதோறும் ரமலான் பிறை தொடங்கிய நாளில் இருந்து நோன்பு கடைப்பிடிக்கப்படும்.

இந்த ஆண்டுக்கானரமலான் நோன்பு நாளை (ஞாயிற்றுக்கிழமை) தொடங்குகிறது. இதுகுறித்து தமிழக அரசின் தலைமை காஜி டாக்டர் சலாகுத்தீன் அய்யூப் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது: ஹிஜ்ரி 1446 ஷாபான் மாதம் 29ந்தேதி வெள்ளிக்கிழமை ஆங்கில மாதம் 28.2.2025 தேதி அன்று மாலை ரமலான் மாத பிறை சென்னையிலும் இதர மாவட்டங்களிலும் காணப்படவில்லை.

ஆகையால் ஞாயிற்றுக்கிழமை ஆங்கில மாதம் 2.3.2025ந்தேதி அன்று ரமலான் மாத முதல் பிறை என்று ஷரியத் முறைப்படி நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. நோன்பு என்பது கிழக்கு வெளுத்ததில் இருந்து சூரியன் மறையும் வரை உண்ணுதல், பருகுதல் உள்பட நோன்பை முடிக்கும் காரியங்களை விட்டு ஒருவர் தன்னை தடுத்து கொள்வதாகும்.

புனித ரமலான் மாதத்தையொட்டி இரவில் சிறப்பு தொழுகையில் ஈடுபடுவார்கள். இந்த மாதம் முழுவதும் சிறப்பு தொழுகையில் ஈடுபடுவார்கள்.

இந்த புனித மாதத்தில் முஸ்லிம்கள் தர்மம் எனும் ஜகாத்தில் ஈடுபடுவார்கள். மேலும் திருக்குர் ஆன் ஓதுதல், பிரார்த்தனைசெய்தல்உள்ளிட்ட பல்வேறுவழிபாடுகளில் ஈடுபடுவார்கள். ஒரு மாத கால நோன்பு முடிவில் ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்படும்.

# காட்டுமன்னார்கோவிலில் பா.ஜ.க.வினர் திடீர் சாலை மறியல்: போலீசாருடன் வாக்குவாதம்-பரபரப்பு



காட்டுமன்னார்கோவில், மார்ச். 2

மனிதநேய மக்கள் கட்சி நிர்வாகிகளை கைது செய்யக்கோரி பா.ஜ.க. வினர் திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர். அப்போது அவர்களுக்கும் போலீசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவிலில் வக்பு திருத்த சட்டத்திற்கு எதிராக மத்திய அரசை கண்டித்து மனித நேய மக்கள் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது பிரதமர் மோடியின் உருவப்படத்தை எரித்ததாக கூறப்படுகிறது. இதற்கு பா.ஜ.க.வினர் எதிர்ப்பு தெரிவித்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட மனித நேய மக்கள் கட்சி நிர்வாகிகள் அனைவரையும் கைது செய்ய வேண்டும் என்று பா.ஜ.க.வினர் வலியுறுத்தினர்.

இதனை தொடர்ந்து காட்டுமன்னார் கோவில் போலீசார் மனிதநேய மக்கள் கட்சியினர் 5 பேரை கைது செய்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மனிதநேய மக்கள் கட்சியினர் அனைவரையும் கைது செய்ய வலியுறுத்தி காட்டுமன்னார் கோவில் பஸ் நிலையம் அருகே பா.ஜ.க.வினர் மாவட்ட தலைவர் தமிழழகன் தலைமையில் போராட்டத்தில் ஈடுபட முயன்றனர்.

அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தினர். இதனால் போலீசாருக்கும், பா.ஜ.க.வினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதை கேள்விபட்டதும் கடலூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஜெயக்குமார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஆனால், மனிதநேய கட்சியினர் அனைவரையும் கைது செய்தால்தான் போராட்டத்தை கைவிடுவோம் என்று கூறினர்.

இந்த நிலையில் பா.ஜ.க.வினர் சாலையில் அமர்ந்து போராட்டம் நடத்தினர்.

அவர்களை போலீசார் அப்புறப்படுத்த முயன்றனர். ஆனாலும் முடியவில்லை.

இதனை தொடர்ந்து மறியலில் ஈடுபட்ட 76 பேரை போலீசார் கைது செய்தனர். இந்த சம்பவத்தால் காட்டுமன்னார் கோவிலில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# மார்ச் மாத நூல் விலையில் மாற்றம் இல்லை தொழில்துறையினர் மகிழ்ச்சி



திருப்பூர், மார்ச். 2

திருப்பூரில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பின்னலாடை நிறுவனங்கள் மற்றும் அதனை சார்ந்த ஜாப் ஒர்க் நிறுவனங்கள் செயல்படுகின்றன. பின்னலாடை தயாரிப்புக்கு மிக முக்கிய மூலப்பொருளாக நூல் இருந்து வருகிறது. தொழில்துறையினர் தங்களுக்கு ஆர்டர்கள் கிடைத்தவுடன், அதற்கேற்ப, நூல்களை மொத்தமாக கொள்முதல் செய்து ஆடைகளை தயாரித்து வருவது வழக்கம். நூல் விலை மற்றும் மூலப்பொருட்களின் விலையை கருத்தில் கொண்டு ஆடைகளின் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. மார்ச் மாதத்துக்கான நூல் விலையை நூற்பாலைகள் இன்று அறிவித்தன. இதில் நூல் விலையில் மாற்றமில்லை. இதனால் தொழில் துறையினர் மகிழ்ச்சி அடைந்தனர்.

அதன்படி கிலோவுக்கு 10ம் நம்பர் கோம்டு நூல் ரூ.175, 16ம் நம்பர் ரூ.185, 20ம் நம்பர் கோம்டு நூல் ரூ.243, 24ம் நம்பர் ரூ.255, 30ம் நம்பர் ரூ.265, 34ம் நம்பர் ரூ.283, 40ம் நம்பர் ரூ.303, 20ம் நம்பர் செமி கோம்டு ரூ.240, 24ம் நம்பர் ரூ. 250, 30ம் நம்பர் ரூ.260, 34ம் நம்பர் ரூ. 273, 40ம் நம்பர் ரூ.293க்கும் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீமானின் பேச்சை அவரது கட்சிப் பெண்கள் எப்படி சகித்துக்கொள்கிறார்கள் கனிமொழி



சென்னை, மார்ச் 2

சென்னையில் தி.மு.க. எம்.பி. கனிமொழி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

ரெயில்வே துறையில் இருக்கக்கூடிய பிரச்சனைகளை அமைச்சர் தீர்த்து, நாடு முழுவதும் ரெயில் விபத்துகள் ஏற்படாமல் கவனித்தால் நாட்டிற்கு மிகப்பெரிய பலனை ஏற்படுத்தும்.

மும்மொழிக்கொள்கையை திணிப்பது தி.மு.க.வோ, அதன்தலைவரோ அல்ல.

மும்மொழிக்கொள்கையை ஏற்றுக்கொள்ளாவிட்டால், புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாவிட்டால் தமிழகத்திற்கு தரவேண்டிய நிதியை தர மாட்டோம் என்று அதிகாரத்தோடு சொல்லக்கூடியவர்கள் தான் இங்கே பிரச்சனைகளை உருவாக்கி கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாடு என்றாலே ஒரு இளக்காரம், தமிழ்நாட்டு மக்கள் எங்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள் அதனால் அந்த மக்களுக்கு எந்த திட்டங்களையும் செய்யக்கூடாது என்ற எண்ணத்தோடு செயல்படுவதுதான் பிளவை ஏற்படுத்துமே தவிர உரிமைகளுக்காக பேசுவது, போராடுவது என்பது எந்த பிளவையும் ஏற்படுத்தாது. சமூகத்தை ஒருங்கிணைக்கும்.

சீமானின் வீட்டில் இருக்கும் பெண்கள், கட்சியில் இருக்கும் பெண்கள் கேட்க வேண்டும். இதை விட கேவலமாக பேசுவதை பெண்களை எப்படி சகித்துக்கொண்டு, பொறுத்துக்கொண்டு, கேட்டுக்கொண்டு அந்த வீட்டில் இருக்கிறார்கள், கட்சியில் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை என்று கூறினார்.

# சேலத்தில் கருக்கலைப்பு செய்த 2 ஆஸ்பத்திரிகளை மூட உத்தரவு சுகாதாரத்துறை அதிகாரிகள் நடவடிக்கை

சேலம், மார்ச்.2

சேலம் வீராணம் கோழிப்பண்ணை பஸ் நிறுத்தம் அருகே பசுபதி ஸ்கேன் சென்டர் செயல்பட்டு வந்தது. இந்த ஸ்கேன் சென்டரில் கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கருவில் உள்ள குழந்தைகளை பரிசோதனை செய்து பாலினம் குறித்து விதிகளை மீறி தெரிவித்து வருவதாக புகார்கள் வந்தது.

கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்ட சுகாதாரத்துறை அதிகாரிகள் கடந்த 26ந் தேதி அந்த ஸ்கேன் சென்டரில் ஆய்வு செய்தனர். அப்போது ஆச்சங்குட்டப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய பெண் டாக்டர் முத்தமிழ், தெடாவூர் ஆரம்ப சுகாதார நிலைய நர்சு கலைமணி ஆகிய 2 பேரும் இந்த கிளினிக்கை நடத்தி வந்ததை உறுதி செய்தனர்.

மேலும் பல ஆண்டுகளாக ரகசியமாக பெண்களுக்கு கருவில் உள்ள குழந்தை ஆணா, பெண்ணா? என்று கண்டறிந்து ஸ்கேன் செய்ததும் அதற்கு கட்டணமாக ரூ. 15 ஆயிரம் வரை இடைத்தரர்கள் மூலம் பெற்றதும் தெரிய வந்தது.

இதனையடுத்து அந்த ஸ்கேன் பரிசோதனை மையத்தில் இருந்த ஆவணங்கள் மற்றும் ஸ்கேன் பரிசோதனை கருவிகளை பறிமுதல் செய்த மருத்துவ குழுவினர் அந்த ஸ்கேன் சென்டருக்கு சீல் வைத்தனர். இது தொடர்பாக பெண் டாக்டர் முத்தமிழ், தெடாவூரை சேர்ந்த நர்சு கலைமணி, சேலத்தை சேர்ந்த நர்சு அம்பிகா, ஆத்தூர் பகுதியை சேர்ந்த நர்சுகள் வனிதா, வசந்தி, மங்கை, ராணி, கலைசெல்வி, மகேஸ்வரி ஆகிய 9 பேரும் சஸ்பெண்டு செய்யப்பட்டனர்.

மேலும் இதில் வேறு யாருக்கெல்லாம்தொடர்பு உள்ளது என்பது தொடர்பாக மருத்துவ குழுவினர் விசாரணை நடத்தினர். விசாரணையில், பசுபதி ஸ்கேன் சென்டரில் கருவில் இருக்கும் குழந்தையின் பாலினத்தை கண்டறிந்து அதனை கலைக்க சேலத்தில் உள்ள 3 தனியார் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பியதும் சுகாதாரத்துறையினர் விசாரணையில் தெரிய வந்தது. இதையடுத்து சுகாதாரத்துறை அதிகாரிகள் மாவட்ட இணை இயக்குனர் நந்தினி தலைமையில் விதிமுறையை மீறி செயல்பட்ட சேலம் டவுன் மேட்டுத்தெருவில் உள்ள தனியார் ஆஸ்பத்திரி, பொன்னம்மா ப்பேட்டையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரி, பெரிய புதூரில் உள்ள ஒரு கிளினிக் ஆகிய 3 இடங்களிலும் அதிரடியாக சோதனை செய்தனர்.

அப்போது அந்த மருத்துவமனைகளில் விதிமுறையைமீறி கருக்கலைப்பு செய்தது தெரிய வந்தது. அந்த மருத்துவமனைகளில் கருக்கலைப்பு செய்ததற்கான ஆவணங்களை எடுத்து சென்று அதிகாரிகள் தொடர் ஆய்வு செய்தனர். அதில் இதுவரை எத்தனை பெண்களுக்கு விதிமுறைகளை மீறி கருக்கலைப்பு செய்தனர் என்பது தொடர்பாக ஆய்வு செய்தபோது 3 ஆஸ்பத்திரிகளிலும் 100க்கும் மேற்பட்டோருக்கு விதிமுறைகளை மீறி கருக்கலைப்பு செய்தது தெரிய வந்தது.

இதையடுத்து சேலம் டவுன் மேட்டுத்தெரு மற்றும் பொன்னம்மாப்பேட்டை ஆகிய பகுதிகளில் உள்ள 2 தனியார் ஆஸ்பத்திரிகளை மூடவும், பெரிய புதூரில் உள்ள கிளினிக் அனுமதியில்லாமல் செயல்பட்டதால் அது குறித்து விளக்கம் அளிக்கவும் சுகாதாரத்துறை அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

தொடர்ந்து 2 ஆஸ்பத்திரிகளையும் இன்று மூடாவிட்டால் சீல் வைக்கப்படும் என்றும் அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர். ஆனால் அதனை கண்டு கொள்ளாத ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் தொடர்ந்து ஆஸ்பத்திரியை திறந்து வைத்து சிகிச்சை அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஏற்காட்டில் சாரல் மழையுடன் பனிமூட்டம் சீதோஷ்ண நிலை மாற்றத்தால் சுற்றுலா பயணிகள் உற்சாகம்

ஏற்காடு, மார்ச். 2

சேலம் மாவட்டத்தில் இந்த ஆண்டு தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை அதிகளவில் பெய்தது. இதனால் பெரும்பாலான நீர்நிலைகளில் தண்ணீர் நிரம்பி காணப்படுகிறது. இதன் காரணமாக ஏற்காடு சுற்றுலா தலம் பசுமையாக மாறியது.

ஏற்காட்டில் நிலவும் குளுகுளு சீசனை அனுபவிக்க தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், கர்நாடகா, புதுச்சேரி, ஆந்திரா, உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். குறிப்பாக தொடர் விடுமுறை நாட்கள், வாரவிடுமுறை நாட்களில் சுற்றுலா பயணிகள் வருகை இந்தாண்டு அதிகரித்து காணப்படுகிறது. கடந்த நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் கடுமையான குளிர், பனிப்பொழிவு நிலவியது. தற்போது கோடை காலம் தொடங்கும் முன்பே தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பகல் நேரங்களில் அனல்காற்று வீசிவருகிறது. ஆனாலும் ஏற்காட்டில் குளிர்ந்த காற்று வீசிவருவதால் அதை அனுபவிக்க விடுமுறை தினமான இன்று ஏராளமான சுற்றுலா பயணிகள் ஏற்காட்டிற்கு வந்து உள்ளனர். மேலும் ஏராளமானபேர் நேற்று மாலையே ஏற்காட்டிற்கு வந்தனர். இந்த நிலையில் நேற்று இரவு 8 மணியளவில் ஏற்காட்டில் திடீரென சீதோஷ்ண நிலையில் மாற்றம் ஏற்பட்டு சாரல்ம ழை பெய்தது. இன்று காலையும் சாரல் மழையுடன் கடும் பனிமூட்டமும் நிலவி வருகிறது. ஏற்காட்டிற்கு வந்த சுற்றுலா பயணிகள் சாரல்மழையில் நனைந்த ப்படி பனிமூட்டத்தை ரசித்து வருகிறார்கள். மேலும் தொடர்ந்து குளிர்ந்த காற்றும் வீசிவருகிறது. சமவெளி பகுதிகளில் அனல்காற்று வீசிவரும் நிலையில் ஏற்காட்டில் நிலவிவரும் இந்த சீதோஷ்ண நிலையை சுற்றுலா பயணிகள் ரசித்து வருகிறார்கள். பனிமூட்டம் காரணமாக ஏற்காட்டுற்கு வந்து சென்ற அனைத்து வாகனங்களும் முகப்பு விளக்குகளை ஒளிரவிட்டப்படி வந்து சென்றது.

# 2026ல் த.வெ.க. தனித்து போட்டி: விஜய் ஆட்சியை பிடிப்பார் பிரசாந்த் கிஷோர் சிறப்பு பேட்டி



சென்னை, மார்ச். 2

நடிகர் விஜய், தமிழக வெற்றிக் கழகம் என்ற அரசியல் கட்சியை கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 2ந்தேதி தொடங்கினார்.

அதன்பிறகு கட்சிக் கொடியை அறிமுகப்படுத்திய அவர், கட்சியின் முதல் மாநாட்டை விக்கிரவாண்டியில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 27ந்தேதி மிகவும் பிரமாண்டமாகநடத்திகாட்டி மக்கள் அனைவரது கவனத்தையும் ஈர்த்தார்.

இந்த நிலையில் 2026 சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு மாற்றாக, அ.தி.மு.க.வுடன் தமிழக வெற்றிக்கழகம் கூட்டணி அமைத்து போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருகட்சிகளிடையே கூட்டணி அமைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்த நிலையில் தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் 2ம் ஆண்டு விழா மாமல்லபுரம் அருகே உள்ள சொகுசு விடுதியில் கடந்த 26ந்தேதி நடைபெற்றது. இதில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் என 3 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

இதில் பங்கேற்று பேசிய தமிழக வெற்றிக்கழகம் கட்சியின் தலைவர் விஜய், அறிஞர் அண்ணா கட்சி ஆரம்பித்து 1967ம் ஆண்டு முதல் முறையாக வெற்றி பெற்று ஆட்சி அமைத்தார். புரட்சித்தலைவர் எம்.ஜி. ஆர். கட்சி ஆரம்பித்து 1977ம் ஆண்டு தேர்தலில் நின்று ஆட்சியை பிடித்தார். அவர்கள் இருவருமே மிகப்பெரிய வெற்றியை பெற்றனர். அது தான் வரலாறு, அதேபோல் 2026 தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வரலாறு படைக்கும் என்றார்.

இந்த விழாவில் தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோரும் பங்கேற்று பேசினார். '35ஆண்டு கால அரசியலில் விஜய் புதிய மாற்றத்தை ஏற்படுத்த உள்ளார். விஜய் தலைமையில் தமிழக வெற்றிக்கழகம் தமிழகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும்' என்று அவர் பேசினார்.

இந்த நிலையில் 2026 சட்டசபை தேர்தலில் விஜய், அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேரமாட்டார். விஜய் தனித்து நின்று ஆட்சியை பிடிப்பார் என்று பிரசாந்த் கிஷோர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் வியூக வகுப்பாளரும், ஜன் சுராஜ் கட்சி தலைவருமான பிரசாந்த் கிஷோர் தந்தி டி.வி.க்கு பிரத்யேக பேட்டி அளித்தார். அந்த பேட்டியில் பிரசாந்த் கிஷோர் கூறியதாவது:

தமிழகத்தில் 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் கட்சியுடன் கூட்டணி அமைக்க அ.தி.மு.க. விருப்பம் தெரிவித்துள்ளது. ஆனால் 2026 சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க.வுடன் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் கூட்டணி இல்லை. தேர்தலில் தமிழக வெற்றிக்கழகம் தனித்து போட்டியிட உள்ளது. தனித்து தேர்தலை சந்திப்பதற்காக கட்சியின் தலைவர் விஜய் வியூகம் வகுத்து வருகிறார். தேர்தலில் விஜய் தனித்து போட்டியிட்டு ஆட்சியை பிடிப்பார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# அனல்மின் நிலைய ஒப்பந்த தொழிலாளர்கள் தொடர் காத்திருப்பு போராட்டம்

தூத்துக்குடி, மார்ச். 2

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் பணிபுரியும் ஒப்பந்த ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான ஒப்பந்த தொழிலாளர் கூட்டமைப்பு சார்பில் பணிகளை புறக்கணித்து அனல் மின் நிலையம் முன்பு ஒப்பந்த தொழிலாளர்கள்தொடர்காத்திருப்பு போராட்டம் நேற்று காலை முதல் தொடங்கினர். இரவு தொடர்ந்த போராட்டம் இன்றும் நடைபெற்று வருகிறது. இதில் 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். இது குறித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்க நிர்வாகிகள் கூறியதாவது:



தூத்துக்குடி, மேட்டூர், வடசென்னை உள்ளிட்ட அனல் மின் நிலையங்கள் மற்றும் மின்சார விநியோக பிரிவில் ஆயிரக்கணக்கான ஒப்பந்த ஊழியர்கள் பல ஆண்டுகளாக பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த 2021ம் ஆண்டு தி.மு.க. தேர்தல் வாக்குறுதியில் 10 ஆண்டுகள் ஆன ஒப்பந்த ஊழியர்களை பணி நிரந்தரம் செய்வோம் என கூறினர். ஆனால் ஆட்சிக்கு வந்து 4 ஆண்டுகள் ஆகியும் இதுவரை அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. அதனை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று தூத்துக்குடியில் அனல் மின் நிலையம் முன்பு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான ஒப்பந்த தொழிலாளர் கூட்டமைப்பு சார்பில் ஒப்பந்த ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம்.

குறைந்தபட்ச ஊதியமாக ரூ.30 ஆயிரம் வழங்க வேண்டும். மாதம் 5ந் தேதிக்குள் ஊதியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வார விடுமுறையுடன் கூடிய ஊதியம் வழங்க வேண்டும். ஒப்பந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை வங்கிக் கணக்கில் வரவு வைக்க வேண்டும். ரசீது வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆண், பெண் ஒப்பந்த ஊழியர்கள் தொடர் காத்திருப்பு மற்றும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டம் காரணமாக கோடைகாலத்தில் மின் உற்பத்தி பாதிப்பு ஏற்படும் சூழல் இருப்பதாக கூறப்படுகிறது.

# ஈரோட்டில் லாரி மீது கார் மோதி விபத்து 5 பேர் பலி

ஈரோடு, மார்ச். 2

ஈரோடு மாவட்டம் தாளவாடியில் லாரி மீது கார் மோதிய விபத்தில் 2 பெண்கள் உள்பட 5 பேர் விபத்தில் உயிரிழந்தனர். கர்நாடகாவில் உள்ள மாதேஸ்வரர் கோவிலுக்கு சென்று திரும்பியபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.



இந்த விபத்தில் காரில் பயணித்த 5 பேரும் உயிரிழந்தனர். 5 பேரும் மண்டியா மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் விபத்து தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஊத்தங்கரை அருகே வினோதம்: சிவலிங்கத்தை தரிசனம் செய்யும் சேவல்

ஊத்தங்கரை, மார்ச். 2

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அருகே உள்ள ராமகிருஷ்ணபதி ஊராட்சியில் ஒரு புதிய சிவன் கோவில் கட்டுமானம் நடந்து வருகிறது. இந்த கோவில் கட்டுமானத்தின் போது, அங்கு இருந்த பழைய கற்கால சிவலிங்கம் அருகிலுள்ள ஒரு கூரை கொட்டாயில் தற்காலிகமாக வைக்கப்பட்டு, வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது.

இந்த இடத்தில் ஒரு விந்தையான நிகழ்வு நடந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தினந்தோறும் மதியம் 12 மணிக்கு, ஒரு சேவல் தானாக வந்து, சிவலிங்கத்தை 45 நிமிடங்கள் அசையாமல் பார்த்துக்கொண்டு நிற்கிறது. இந்த நிகழ்வு கடந்த சில நாட்களாக தொடர்ந்து நடந்து வருகிறது. சேவலின் இந்த தெய்வீக தரிசனம் அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும், இன்பத்தையும், ஆன்மீக உணர்வுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிகழ்வு, கோவில் கட்டுமானம் முடிந்து கருவறை உருவாகும் வரை தொடரும் என்று மக்கள் நம்புகின்றனர். குறிப்பாக, கருவறை வெளியில் இருக்கும் இந்த கற்கால சிவலிங்கத்தை நோக்கி ஒரு பறவை இனமான சேவல் தினசரி வந்து தரிசனம் செய்வது, அதன் உண்மையான ஆன்மீக சக்தியை வெளிப்படுத்துவதாக கருதப்படுகிறது.



இந்த விந்தையான நிகழ்வு ராமகிருஷ்ணபதி மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் இதை ஒரு தெய்வீக அடையாளமாகக் கருதி, கோவில் கட்டுமானம் விரைவாக முடிக்கப்பட வேண்டும் என விரும்புகின்றனர். இந்த நிகழ்வு ஆன்மீக ரீதியாக மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளது.

# திருவாரூர் மாவட்டத்தில் கனமழையால் 10 ஆயிரம் ஏக்கர் பச்சைப்பயிறு பாதிப்பு

திருவாரூர், மார்ச். 2

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா அறுவடைக்குப் பிறகு பச்சைபயிறு சாகுபடி பணிகளில் விவசாயிகள் மும்முறமாக ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டம் முழுவதும் 55 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த சாகுபடிக்கு முற்றிலும் தண்ணீர் தேவைப்படாது. தற்பொழுது 35 நாட்களான பச்சைப் பயிறு சங்கு வைத்து பூக்கும் தருவாயில் இருந்து வருகிறது.

இந்த நிலையில் திருவாரூர் மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்தது. பகல் முழுவதும் விட்டு விட்டு மழை கொட்டியது. இன்று 2வது நாளாகவும் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கனமழை பெய்து வருகிறது. தொடர் மழையால் சாகுபடி வயல்களில்பச்சைப்பயிர்களை தண்ணீர்சூழ்ந்து தேங்கி நிற்கிறது. இதனால் பச்சைப்பயிர் செடிகள் பாதிக்கப்பட்டுள்ளன. பூக்கள் அனைத்தும் கொட்டி பழுப்பு நிறத்தில் மாறியுள்ளது.



குறிப்பாக கமலாபுரம், வடபாதிமங்கலம், கொரடாச்சேரி, கூத்தா நல்லூர், கோட்டூர், பூந்தாலங்குடி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் அதிக அளவிலான பயிர் செடிகள் முற்றிலுமாக சேதம் அடைந்துள்ளது. மொத்தம் 10 ஆயிரம் ஏக்கர் அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், சம்பா பயிரானது அறுவடை நேரத்தில் மழையினால் சாய்ந்து சேதம் அடைந்து மகசூல் இழப்பு ஏற்பட்டது. அதிலிருந்து மீண்டு பச்சைப் பயிறு சாகுபடி செய்த நிலையில் தற்போது பெய்த மழையின் காரணமாக அதுவும் பாதிக்கப்பட்டுள்ளது. ஏக்கர் ஒன்றுக்கு டானிக் மற்றும் பூச்சி மருந்துகள் சுமார் ரூ.4000க்கு தெளித்து செலவு செய்தோம். எனவே அரசு உடனடியாக பாதிப்புகளை பார்வையிட்டு பயிர் காப்பீட்டு தொகை மற்றும் நிவாரணம் வழங்க வேண்டும் என்றனர்.


# ஒகேனக்கலுக்கு நீர்வரத்து ஆயிரம் கனஅடியாக குறைந்தது

ஒகேனக்கல், மார்ச். 2

கர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கலுக்கு நீர் வரத்து கடந்த ஒரு வாரமாக குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று ஒகேனக்கலுக்கு நீர்வரத்து 1200 கனஅடியாக வந்தது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த மழை குறைந்துள்ளது. இதனால் இன்று காலை 8 மணிநிலவரப்படி 1000 கன அடியாக தண்ணீர் குறைந்து வந்தது.

மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது.




சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் பரிசல் பயணம் மேற்கொண்டு காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர். மேலும் தொங்கு பாலத்தில் நின்று காவிரி ஆற்றில் பாறைகளுக்கு நடுவே விழும் தண்ணீரை ஆர்வமுடன் ரசித்து மகிழ்ந்தனர்.

காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழக கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# நான் நம்பாத விஷயத்தை அனைவரும் கண்டு அஞ்சும் அளவுக்கு படமாக எடுத்திருக்கிறேன் – 'மர்மர்' இயக்குனர்

ஹேமந்த் நாராயணன் 'மர்மர்' என்ற திரைப்படத்தை இயக்கியுள்ளார். இத்திரைப்படமே தமிழில் உருவாகியுள்ள முதல் பவுண்ட் புட்டேஜ் ஹாரர் திரைப்படமாகும். பவுண்ட் புட்டேஜ் ஹாரர் திரைப்படங்கள் என்றால் திரைப்படத்தின் காட்சிகள் பெரும்பாலானவை டேப் ரெகார்டர், சிசிடிவி கேமராபூட்டஜ்போலயேகாட்சிபடுத்திருப்பர்.இதன்மூலம்உண்மையாகவவே அந்த அமானுஷ்ய சம்பவ உணர்வை அது பார்வையாளர்களுக்கு கடத்தும்.




இப்படத்தை ஸ்டான் அலோன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. பர்ஸ்ட் லுக் போஸ்டரில் 'கபா கபா கபிஸ்து' என்ற வார்த்தை இடம்பெற்றது. படத்தின் ஒளிப்பதிவை ஜேசன் வில்லியம் மேற்கொள்கிறார்.ரோகித் படத்தொகுப்பை செய்கிறார். திரைப்படத்தில் நடித்துள்ள நடிகர்களின் விவரத்தை விரைவில் வெளியிடுவர் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. 'மர்மர்' செகண்ட் லுக் போஸ்டர் வெளியாகி வைரலானது. 'மர்மர்' திரைப்படம் வரும் மார்ச் மாதம் 7ம் தேதி வெளியாகுமென படக்குழு அறிவித்துள்ளது. 'மர்மர்' படத்தின் புதிய டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது.

இயக்குநர் ஹேம்நாத் நாராயணன் பேசும்போது, "மர்மர் தமிழ் திரையுலகின் முதல் பவுண்ட் பூட்டேஜ் ஹாரர் திரைப்படம். அமானுஷ்ய விஷயங்கள் சார்ந்த தகவல்களை பதிவிடும் ஏழு யூடியூபர்கள் ஜவ்வாது மலையில் இருக்கும் ஏழு கன்னிசாமிகள் மற்றும் மங்கை எனும் சூனியக்கார ஆவி சுற்றித் திரிவதை நேரடியாக பதிவு செய்ய செல்கிறார்கள். செல்லும் வழியில் அவர்கள் காணால் போகின்றனர். அவர்களை கண்டுபிடிக்க செல்லும் காவல் துறையினர் உடைந்து கிடக்கும் கேமராக்களை பறிமுதல் செய்கின்றனர். அவ்வாறு கேமராக்களில் உள்ள காட்சிகளை ஆவணப் படமாக வெளியிடுகிறார்கள். அதைத்தான் இந்தப் படத்தின் கதையாக வைத்திருக்கிறோம்.

எனக்கு தனிப்பட்ட முறையில் பேய் நம்பிக்கை இல்லை. நான் நம்பாத ஒரு விஷயத்தை அனைவரும் கண்டு அஞ்சும் அளவுக்கு இந்தப் படத்தை எடுத்திருக்கிறேன். எனக்கு பேய் மீது நம்பிக்கையில்லை. இந்தப் படத்தின் மீது நம்பிக்கை உள்ளது. என் மீது நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கையில்தான் இந்தப் படத்தை எடுத்திருக்கிறேன்.." என்று கூறினார்.

# தாமதமாக வெளியான 'சப்தம்' திரைப்படம் நடிகர் ஆதி வருத்தம்



இயக்குனர் அறிவழகன் இயக்கத்தில் நடிகர் ஆதி நடிப்பில் உருவான படம் 'சப்தம்'. இந்த படத்தில் ஆதி, 'ரூபன்' என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். 7ஜி பிலிம்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்தில் சிம்ரன், லைலா, லட்சுமி மேனன், ரெடின் கிங்ஸ்லி, எம்.எஸ். பாஸ்கர், ராஜீவ் மேனன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். சஸ்பென்ஸ், திகில் பாணியில் உருவாகியுள்ள இந்த படம், பிப்ரவரி 28ந்தேதி(நேற்று) திரையரங்குகளில் வெளியாக இருந்த நிலையில், தயாரிப்பு நிறுவனம் தரப்பில் பைனான்சியரிடம் பெற்ற கடனை திருப்பிதரதாமதம்ஏற்பட்டதால்படத்திற்குதடையில்லாசான்றிதழ்வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் திரைப்படம் திட்டமிட்டமிபடி நேற்று வெளியாகாமல், இன்று(மார்ச் 1ந்தேதி) காலை முதல் திரையரங்குகளில் வெளியானது. இந்நிலையில், திரைப்படத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட தாமதத்திற்கு நடிகர் ஆதி வருத்தம் தெரிவித்துள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது; "மார்ச் 1ந்தேதி 'சப்தம்' திரைப்படம் வெளியாகியுள்ளது. திரைப்படம் வெளியாகாமல் போனது மிகப்பெரிய இழப்புதான். நிறைய இடங்களில் ரசிகர்கள் முன்பதிவு செய்து படம் பார்க்க முடியாமல் திரும்பி சென்றுள்ளனர். அவர்களிடம் நாங்கள் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம். எனது திரைப்பயணத்தில் இதற்கு முன்பு இப்படி நடந்தது கிடையாது. திரைப்படத்தின் வெளியீட்டில் தாமதம் ஏற்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை. இதற்காக யாரையும் நாங்கள் குறை சொல்லவில்லை. இன்று படம் வெளியாகிவிட்டது. நாங்கள் படத்திற்காக புரமோஷன் எதுவும் செய்யவில்லை. இந்த படத்தை பார்த்துவிட்டு, பிடித்திருந்தால் உங்கள் நண்பர்களிடம் சொல்லுங்கள். அதுதான் இந்த படத்திற்கான புரமோஷன்." இவ்வாறு ஆதி தெரிவித்தார்.

# பி.டி.எஸ் பாடகர் ஜின்ஐ முத்தமிட்ட ரசிகை...பாய்ந்த நடவடிக்கை

தென்கொரியாவை சேர்ந்த பிரபல பி.டி.எஸ் இசைக்குழுவிற்கு உலகம் முழுவதும் ஏகப்பட்ட ரசிகர்கள் உள்ளனர். குறிப்பாக பெண்கள் அதிகளவில் உள்ளனர்.


இந்த சூழலில், தென்கொரியாவில் 18வயதிற்கு மேற்பட்ட அனைவரும் 18 மாதகட்டாயம் ராணுவ பயற்சி மேற்கொள்ள வேண்டும். அதன்படி கடந்த ஆண்டு ஜின் இந்த ராணுவ பயிற்சியை முடித்தார். இதனையடுத்து, அவர் ரசிகர்களை சந்திப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், 50 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் திடீரென அவர் பக்கத்தில் சென்று முத்தம் கொடுத்தார். இது தொடர்பாக மற்றொரு ரசிகை கிரிமினல் புகார் தொடர்ந்ததை அடுத்து, முத்தமிட்ட ரசிகை மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் அந்த பெண் யார் என்று தேடிய போது,அவர் ஜப்பான் நாட்டை சேர்ந்தவர் என கண்டுபிடிக்கப்பட்டது,போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு ஆஜராகும் படி சம்மன் அனுப்பியுள்ளனர்.

# உலக செஸ் தரவரிசையில் 3வது இடத்துக்கு முன்னேறினார் குகேஷ்

உலக செஸ் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை (கிளாசிக்கல்) சர்வதேச செஸ் சம்மேளனம் நேற்று வெளியிட்டது. இதன்படி முன்னாள் உலக சாம்பியனான நார்வேயின் மாக்னஸ் கார்ல்சென் (2,833 புள்ளி), ஜப்பானின் ஹிகாரு நகமுரா (2,802) முறையே முதல் 2 இடங்களில் தொடருகின்றனர்.



கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் உலக செஸ் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றிய சென்னையை சேர்ந்த 18 வயது குகேஷ் (2,787) 10 புள்ளிகள் அதிகரித்து 2 இடம் முன்னேற்றம் கண்டு 3வது இடத்தை பிடித்துள்ளார். இது அவரது சிறந்த தரநிலையாகும்.சென்னையை சேர்ந்த கிராண்ட்மாஸ்டரான பிரக்ஞானந்தா (2,758) 8வது இடத்துக்கு முன்னேறி இருக்கிறார். அவர் கடந்த ஆண்டு ஜூலை மாதத்துக்கு பிறகு டாப்10 இடங்களுக்குள் வருவது இதுவே முதல்முறையாகும்.

வீராங்கனைகள் தரவரிசையில் இந்தியாவின் கோனேரு ஹம்பி (2,528) 6வது இடத்திலும், ஆர்.வைஷாலி (2,484) 14வது இடத்திலும், ஹரிகா (2,483) 16வது இடத்திலும் இருக்கின்றனர்.

# ஐ.எஸ்.எல். கால்பந்து ; ஈஸ்ட் பெங்கால் பெங்களூரு அணிகள் இன்று மோதல்



13 அணிகள் இடையிலான 11வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது.

இந்த தொடரில் இன்று கொல்கத்தாவில் நடைபெறும் லீக் ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் பெங்களூரு அணிகள் மோத உள்ளன.

இந்த தொடரில் இதுவரை நடந்துள்ள லீக் ஆட்டங்களின் முடிவில் பெங்களூரு அணி புள்ளிப்பட்டியலில் 4வது இடத்தில் உள்ளது அதேவேளையில், .ஈஸ்ட் பெங்கால் அணி 8வது இடத்தில் உள்ளது

# ஜெர்மன் ஓபன் பேட்மிண்டன்: அரையிறுதியில் இந்திய ஜோடி தோல்வி

ஜெர்மனி ஓபன் பேட்மிண்டன் தொடர் ஜெர்மனியில் நடைபெற்று வருகிறது. இதில் கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதிசுற்றில்இந்தியாவின்தனிஷாகிரஸ்டோதுருவ்கபிலாஜோடி,இந்தோனேசியாவின்குஷார்ஜண்டோகுளோரியா ஜோடியுடன் மோதியது.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் இந்திய ஜோடி 2325, 2110, 1521 என்ற செட் கணக்கில் போராடி தோல்வி அடைந்தது.

# சாம்பியன்ஸ் டிராபி; இந்தியா நியூசிலாந்து அணிகள் இன்று மோதல்




சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் தொடர் பாகிஸ்தானில் நடந்து வருகிறது. பாதுகாப்புகாரணங்களுக்காக பாகிஸ்தான் செல்ல மறுத்ததால் இந்திய அணிக்குரிய ஆட்டம் மட்டும் துபாயில் நடக்கிறது.

இந்த போட்டி தொடரில் துபாயில் உள்ள சர்வதேச கிரிக்கெட் ஸ்டேடியத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் 12வது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா, நியூசிலாந்து (ஏ பிரிவு) அணியை சந்திக்கிறது.

ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி தனது முதல் 2 லீக் ஆட்டங்களில் முறையே வங்காளதேசத்தையும், பாகிஸ்தானையும் 6 விக்கெட் வித்தியாசத்தில் தோற்கடித்து அரையிறுதியை உறுதி செய்தது. இதேபோல் மிட்செல் சான்ட்னெர் தலைமையிலான நியூசிலாந்து அணி லீக் ஆட்டங்களில் 60 ரன் வித்தியாசத்தில் பாகிஸ்தானையும், 5 விக்கெட் வித்தியாசத்தில் வங்காளதேசத்தையும் துவம்சம் செய்து அரையிறுதியை எட்டியது. அரையிறுதிக்கு தகுதி பெற்று விட்ட இவ்விரு அணிகளும் தங்கள் பிரிவில் முதலிடத்தை பிடிக்க தீவிரம் காட்டுகின்றன.

பிற்பகல் 2.30 மணிக்கு தொடங்கும் இந்த ஆட்டத்தை ஸ்போர்ட்ஸ் 18 மற்றும் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனல்கள் நேரடி ஒளிபரப்பு செய்கின்றன.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.